**தொடர் தொலைக்கல்வி நிலையம்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**
**இளங்கலைமாணி (BA) 100 வது மட்ட பரீட்சை**
**(இணையவழி மூலமாக வீட்டிலிருந்து தோற்றும் திறந்தபுத்தக தேர்வு - 2018 மாணவர் குழு)**

(2018 மாணவர் குழுவிற்கான) இளங்கலைமாணி பட்டம் (BA) 100 வது மட்ட பரீட்சைகள் **2021 ஜுலை** மாதம் இணையவழி மூலகமாக வீட்டிலிருந்து தோற்றும் திறந்த புத்தக தேர்வாக நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் பின்வரும் அறிவுறுத்தல்களை கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1. பரீட்சைக்கான திகதி மற்றும் வினாத்தாளைப் பார்வையிடுவதற்கான/பதிவிறக்கம் செய்வதற்கான நேரம் மற்றும் விடைத்தாள்களைப் பதிவேற்றம் செய்வதற்கான நேரம் ஆகியவற்றை உள்ளடக்கிய கால அட்டவணையானது தொடர்தொலைக்கல்வி நிலைய (CDCE) இணையதளத்தில் முன்கூட்டியே வெளியிடப்படும்.

2. பரீட்சைக்கான அனுமதி அட்டையும் (Admissions) கால அட்டவணையுடன் பதிவேற்றப்படும். மாணவர்கள் தங்களின் அனுமதி அட்டையை பிரதி எடுத்து அதில் கையொப்பமிட்டு சகல பாடங்களுக்கான பரீட்சைகளும் நிறைவடைந்த பின் அதன் ஸ்கேன் பிரதியை LMS இல் பதிவேற்றம் செய்வதுடன் அனுமதி அட்டையின் மூலப் பிரதியை பதிவுத் தபாலில் தொடர்தொலைக்கல்வி நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

3. மாணவர்கள் தொடர்தொலைக்கல்வி நிலைய இணைதள LMS இல் தங்கள் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் (Username and Password) ஆகியவற்றைப் பயன்படுத்தி வினாத்தாள்களைப் பதிவிறக்கம் செய்யும் படிமுறைகளை முன்கூட்டியே பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.

4. பரீட்சை வினாத்தாள்களை பதிவிறக்கம் செய்த பின் CDCELMS இலிருந்து கண்டிப்பாக Log out செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

5. மாணவர்கள் கண்டிப்பாக தங்கள் விடைகளை A4 அளவிலான வெள்ளைநிற தாளில் **(White Colour A4 half sheets)** எழுதுதல் வேண்டும்.

6. சகல விடைத்தாள்களும் பொருத்தமான ஸ்கேனர்/ஸ்கேனிங் ஆப் (scanning app) பயன்படுத்தி ஒரு PDF கோப்பாக பதிவேற்றப்படல் வேண்டும். ஒரு கோப்பு 5MB (megabytes) அளவிற்கு மேற்படலாகாது.

7. மாணவர்கள் **விடைத்தாளின் மூலப்பிரதியை தங்கள் வசம் கவனமாக வைத்திருத்தல் வேண்டும். எமது நிலையமானது விடைத்தாள்களை தபாலில் அனுப்புமாறு கோரப்படுமிடத்து அவை அனுப்பப்படல் வேண்டும்.**

8. விடைத்தாள்களை ஸ்கேனிங் ஆப் (scanning app) பயன்படுத்தாது, படமாக எடுத்து (photos) அவற்றை PDF கோப்பாக பதிவேற்றம் செய்யவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

9. மாணவர்கள் விடைத்தாள்களைப் பதிவேற்றம் செய்யும்போது கோப்பின் பெயர் பின்வருமாறு அமைதல் வேண்டும். உ+ம் - Subject Code_user name **(SOCE101_aeba20181234)**

10. ஒரு பாடத்திற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட PDF கோப்புகளை பதிவேற்றம் செய்ய முடியாது. பதிவேற்றி கோப்பை அழித்துவிட்டு மீண்டுமொரு முறை பதிவேற்ற வேண்டி ஏற்படின், ஏற்கனவே பதிவேற்றிய கோப்பை அழித்துவிட்டு (Delete) குறித்த நேரத்திற்கு முன்னர் புது கோப்பு பதிவேற்றப்படல் வேண்டும்.

11. ஒவ்வொரு வினாத்தாளுக்குமான அறிவுறுத்தற் பத்திரம் குறித்த வினாத்தாளுடன் பதிவேற்றப்படும். (ஒவ்வொரு வினாத்தாளுக்குமான அறிவுறுத்தல் பத்திரம் வேறுபடும்)

12. வினாத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள பக்கங்களின் **எண்ணிக்கைக்கு மேலதிகமான பக்கங்களில்**

**பதிலளிப்பதை கண்டிப்பாக தவிர்த்துக்கொள்ளுமாறு** மாணவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். விடைத்தாள்ளை திருத்தும் வேளையில் மேலதிக பக்கங்கள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

13. மாணவர்கள் தங்கள் பதிவிலக்கம், பாட எண், மொழிமூலம் மற்ற பக்க எண் ஆகியவை விடைத்தாளின் இடது மேல் மூலையிலும் தங்கள் கையொப்பத்தினை தாளின் இடது கீழ் மூலையிலும் இடல் வேண்டும்.

    உதாரணம் :

    | |
    |---|
    | **AE/BA/2018/8000**<br>**SOCE 101**<br>**TAMIL**<br>**01**<br><br><br><br><br>***Signature*** |

14. சகல விடைத்தாள்களும் கையெழுத்தினால் மட்டுமே எழுதப்படல் வேண்டும். கணிணிமயப்படுத்தப்பட்ட **(Type written)** **விடைத்தாள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

15. விடைத்தாள்கள் முடிவுத் திகதி மற்றும் குறித்த நேரத்திற்குள் பதிவேற்றம் செய்யப்படாவிடின், எக்காரணத்தை முன்னிட்டும் மீள ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

16. மின்னஞ்சலூடாக (email) எமக்கு அனுப்பப்படும் விடைத்தாள்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

17. விடைத்தாள்களைப் பதிவேற்றம் செய்யும்போது, முடிவுத் திகதியின் கடைசித் தருணத்தில் பதிவேற்றம் செய்யும்போது ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்கவும் சரியாக பதிவேற்றம் செய்யவும், **விடைகளை எழுதி முடித்தவுடனேயே பதிவேற்றம் செய்யப்படவேண்டிய நேரம் வரை காத்திருக்காது கூடிய விரைவில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.**

18. மாணவர்கள் விடைத்தாள்களை பதிவேற்றம் செய்து **save செய்வதற்கு “Save Changes”** எனும் தெரிவை தெரிவு செய்தல் வேண்டும்.

19. வினாத்தாள்களைப் பதிவிறக்கம் செய்து விடைத்தாள்களைப் பதிவேற்றம் செய்வது வரையான படிநிலைகளை நான்கு வீடியோ பதிவுகளாக, ஆங்கில மொழியில் தமிழ் மற்றும் சிங்கள உப தலைப்புகளுன் எமது இணையதளத்தில் (https://cdce.pdn.ac.lk/) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. பரீட்சைக்கு தயாராவதற்கு முன் மாணவர்கள் அவற்றை கட்டாயம் பார்வையிடல் வேண்டும்.

20. வீட்டிலிருந்து தோற்றும் திறந்த நூற் தேர்வில் கேள்விகளுக்கான பதில்களைத் தொகுப்பதற்கு மாணவர்கள் கற்றல் ஆவணங்களை உபயோகப்படுத்தும் போது, இணையம் மற்றும் பிற ஆதாரங்களுக்கான அனைத்து நேரடி மேற்கோள்கள் மற்றும் மறைமுக குறிப்புகளை சரியாக அடையாளம் கண்டு மேற்கோள்காட்டுவதற்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

21. புத்தகங்கள் மற்றும் இணைய மூலங்களிலிருந்து அறியப்படாதவகையில் நகலெடுத்தல் (கருத்து திருட்டு), நண்பர்களிடமிருந்து நகலெடுப்பது, பதில்களை நண்பர்களிடையே பகிர்வது மற்றும் ஆள்மாறாட்டம் உள்ளிட்ட எந்தவொரு பரீட்சை மோசடி அல்லது ஏமாற்று வேலையில் ஈடுபடும் எவருக்கும் எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாணவர்கள் அறிந்திருத்தல் வேண்டும்.

22. பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பிரிவின் தலைவரின் அனுமதியுடன் வீட்டிலிருந்து தோற்றும் திறந்த நூற் தேர்வின்போது மாணவர்களின் ஒழுக்காற்று செயற்பாடுகள் தொடர்பான விதிமுறைகள் தொடர்தொலைக்கல்வி நிலையத்திற்கு பெறப்பட்டது.

23. இந்த இணையவழி பரீட்சையில் தோற்றாத மாணவர்கள் அடுத்த 100 வது மட்ட பரீட்சைக்கு அவர்களின் அமர்வுகளின் அடிப்படையில் தோற்றலாம்.

24. பின்வரும் லிங்கினூடாக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ) இணைப் பார்வையிடலாம் https://cdce.pdn.ac.lk/dload/BA_2021/obth/faq-t.pdf

தேர்வில் வெற்றி பெற வாழ்த்துக்கள்!

மேலதிக தகவல்களுக்கு :

**cdceuopba100level@gmail.com / 0812392208, 0812392215, 0812392218, 0812392210**